பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டம்

---

(1998, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினா் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, ஏப்பிறல் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 25.35 தபாற் செலவு : ரூபா 5.00

# 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ – ஓ 62/ 94

**காணித் துண்டுகளுக்கான உரித்தைப் புலனாய்வு செய்வதற்கும் பதிவு செய்வதற்கும் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட காணி தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :–

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், எந்த இடப்பரப்பிற்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டுமோ அந்த இடப்பரப்பொன்றாக வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மாகாணத்திற்கு, நிர்வாக மாவட்டத்திற்கு அல்லது நிர்வாகப் பெரும்பாகத்திற்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

## முதனிலை

உரித்து நிர்ணய ஆணையாளர்.

2. உரித்து நிர்ணய ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். இவர், இச்சட்டத்தின்கீழ் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் முறையாக நிறைவேற்றுவதற்குப் பொறுப்பானவராதல் வேண்டும் ; அத்துடன் அவசியப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பிரதி ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியும் உரித்துப் பதிவகங்களும்.

3. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி ஒவ்வொரு மாவட்டத்திலும் உரித்துப் பதிவகங்களைப் பேணுதல் வேண்டும். இங்கே இச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பினுள் அமைந்துள்ளவையும் அத்தகைய மாவட்டங்களினுள் அடங்குகின்றவையுமான காணிகளுக்கான உரித்தைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய பதிவேடுகள் பேணப்படவேண்டும்.

(3) உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழ் பணிபுரிவதற்கென அத்தகைய உரித்துப் பதிவகம் ஒவ்வொன்றிற்கும் உரித்துப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

பதிவேட்டு அலகு.

4. மூன்றாம் பிரிவின்கீழ் பேணப்பட்ட உரித்துப் பதிவேட்டிலுள்ள பதிவேட்டு அலகு, நில அளவீடுசார்ந்த படத்தில் காட்டப்பட்ட காணித்துண்டொன்றாதல் வேண்டும்.

பதிவுசெய்யும் முறை.

5. அத்தகைய காணித் துண்டுக்கான உரித்துத் தொடர்பான விதித்துரைக்கப்பட்ட விவரங்களை உரித்துப் பதிவேட்டில் பதிவதன்மூலம் பதிவு செய்தலானது பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

எல்லா அலுவலர்களும் பகிரங்க அலுவலர்கள் என்பது.

6. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட எல்லா அலுவலர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருதுத்தெல்லைக்குள் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இணக்கச் சபைகள்.

7. (1) இச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் உள்ள கிராம சேவகர் பிரிவு ஒவ்வொன்றிற்கும் இணக்கச் சபையொன்று உரித்து நிர்ணய ஆணையாளரினால் நியமிக்கப்படலாம்.

(2) அத்தகைய இணக்கச்சபை ஒவ்வொன்றும் —

(அ) அத்தகைய கிராம சேவகர் பிரிவிற்குள் வதியும் காணியுடையோரிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்றுக்குக் குறையாதோரும் ஏழுக்கு மேற்படாதோருமான உறுப்பினர்களையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பிரிவு ஒவ்வொன்றினதும் கிராம சேவகரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய சபை ஒவ்வொன்றும் அவர்களிடையேயிருந்து தவிசாளர் ஒருவரையும் செயலாளர் ஒருவரையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.



இணக்கச் சபைகளுக்கு ஆற்றுப்படுத்துதல்.

8. உரித்து நிர்ணய ஆணையாளர் ஏதேனும் காணி அமைந்துள்ள இடப்பரப்பிற்கென நியமிக்கப்பட்ட இணக்கச் சபையினால் நிர்ணயிக்கப்படுவதற்காக அத்தகைய காணி சம்பந்தமான ஏதேனும் பிணக்கை ஆற்றுப்படுத்தலாம்.

இணக்கச் சபைகளின் தத்துவங்களும் கடமைகளும்.

9. ஓர் இணக்கச் சபையானது, 8 ஆம் பிரிவின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்துகை செய்யப்படுதவிடத்து, எந்த இடப்பரப்பிற்கென அத்தகைய சபை நியமிக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பில் அமைந்துள்ள காணியில் அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆளுக்கு அது சம்பந்தமான ஏதேனும் பிணக்கைத் தீர்க்கத் துணைபுரிதல் வேண்டும்.

## உரித்துப் 'பதிவுசெய்தல்
### ஆரம்பத் தொகுப்பு

காணித் துண்டொன்றுக்கான உரித்தின் பதிவு, நிலஅளவீடு சார்ந்த படத்திற் கிணங்கியதாக இருத்தல் வேண்டும்.

10. இச்சட்டத்தின்கீழான ஒவ்வொரு காணித் துண்டுக்குமான உரித்தின் பதிவு அந்நோக்கத்திற்கென தயாரிக்கப்பட்ட நில அளவீடு சார்ந்த படத்திற்கிணங்கியதாக இருத்தல் வேண்டும்.

நில அளவீடு சார்ந்த படங்களைத் தயாரித்தல்.

11. இச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று வெளியிடப்பட்டதன்மேல் உரித்து நிர்ணய ஆணையாளர் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளுக்கு அளவீடு சார்ந்த படங்களைத் தயாரிக்கும்படி நில அளவையாளர் தலைமையதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வேண்டுகோளின்மேல் நில அளவையாளர் தலைமையதிபதி அத்தகைய நில அளவீடு சார்ந்த படங்களைத் தயாரிக்கச் செய்து உரித்து நிர்ணய ஆணையாளருக்கு அவற்றின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவித்தலும் வேண்டும்.

அறிவித்தலின் வெளியீடு.

12. உரித்து நிர்ணய ஆணையாளர், நில அளவீடு சார்ந்த படங்களின் அத்தகைய சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் கிடைக்கப்பெற்றதன்மீது, தங்கள் உரிமைக் கோரிக்கைகளை ஓர் அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து விதித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குள் அவருக்குச் சமர்ப்பிக்குமாறு அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காணிக்கான எவரேனும் உரிமைக்கோரிக்கையாளர்களை அழைக்கும் அத்தகைய அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

புலனாய்வு.

13. உரித்து நிர்ணய ஆணையாளர், 12 ஆம் பிரிவின்கீழான அறிவித்தலொன்றிற்கு மறுமொழியாகச் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைகள் உண்மையானவையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்குப் புலனாய்வு ஒன்றை நடப்பித்தல் வேண்டும்.

உரித்தை வெளிப்படுத்தும் கட்டளை.

14. பதின்மூன்றாம் பிரிவின் நியதிகளின்படி புலனாய்வு முடிவுற்றதன் மீது, உரித்து நிர்ணய ஆணையாளர், அதன் மீதான அவரது தீர்மானத்தை வர்த்தமானியில் பின்வருமாறு வெளியிடுதல் வேண்டும் :—

(அ) காணித்துண்டொன்றிற்கான உரிமைக் கோரிக்கையாளர் முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தைக் கொண்டுள்ளார் என உரித்து நிர்ணய ஆணையாளர் கருதுகின்றவிடத்து, அவர் முற்றுரிமைச் சொத்தாண்மையின் முதலாம் வகுப்பு உரித்தொன்றுடன் பதிவு செய்வதற்குத் தகவுடையவரென அத்தகைய உரிமைக் கோரிக்கையாளரை வெளிப்படுத்துதல் வேண்டும் ;

(ஆ) உரிமைக் கோரிக்கையாளரொருவர் முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்துக்குத் தகைமை பெறவில்லை ஆனால் காணித்துண்டை நல்லெண்ணத்துடன் உடைமை கொண்டுள்ளார் என உரித்து நிர்ணய ஆணையாளர் கருதுகின்றவிடத்து, அவர் உரிமைக் கோரிக்கையாளர், அத்தகைய தன்மையில் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து இடையறாததும் எதிர்ப்பில்லாததுமான உடைமை கொண்டிருந்த பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின் முடிவில் இரண்டாம் வகுப்பு உரித்தை முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்துடனான பதிவொன்றாக மாற்றிக்கொள்வதற்கான உரிமையுடன் அத்தகைய இரண்டாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்து உரிமையுடன் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவரென வெளிப்படுத்தலாம் ;



(இ) உரிமைக் கோரிக்கையாளர், உரிமை கோரப்பட்ட காணித்துண்டொன்றின் பகுதியொன்றிற்கான உரிமையை நிலைநாட்டியுள்ளார் என உரித்து நிர்ணய ஆணையாளர் கருதுகின்றவிடத்து, அவர், விடயத்திற்கேற்ப, அத்தகைய காணித்துண்டின் பிரிக்கப்பட்ட பகுதியொன்றுக்கு முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தொன்றுடன் அல்லது இரண்டாம் வகுப்புச் சொத்தாண்மை உரித்தொன்றுடன் பதிவுசெய்யப்படுவதற்கு உரிமைக் கோரிக்கையாளர் தகவுடையவரென வெளிப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) பிரிக்கப்பட்ட காணியின் பகுதியொன்றின் பரப்பளவை விதித்துரைக்கப்பட்ட பயன்வளம் வாய்ந்த அலகொன்றுக்குக் கீழ்ப்பட்டதாகக் குறைக்காமல் அத்தகைய உரிமைகோரிக்கைகளுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை அங்கீகரிப்பது சாத்தியமல்ல என உரித்து நிர்ணய ஆணையாளர் கருதுகின்றவிடத்து, அவர் அத்தகைய காணித்துண்டுக்கு செல்லுபடியான உரிமைக் கோரிக்கையுடைய அத்தகைய எல்லா உரிமைக் கோரிக்கையாளர்களையும் தனித்தனியான உரிமைக் கோரிக்கையாளர்களின் கூட்டுச் சொத்தாண்மையின் வரம்பிற்கு, கூட்டுச் சொத்தாண்மை உரித்துடன் அத்தகைய காணியின் கூட்டுச் சொந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவர்களென வெளிப்படுத்துதல் வேண்டும்.

முகாமையாளரின் நியமனமும் தத்துவங்களும் கடமைகளும்.

15. (1) பதினாலாம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் கூட்டுச் சொத்தாண்மை உரித்தொன்று பதிவு செய்யப்பட்டதன் மீது, உரித்து நிர்ணய ஆணையாளர், கூட்டுச் சொந்தக்காரர்களின் மத்தியிலிருந்து ஒருவரை அத்தகைய கூட்டுச் சொந்தக்காரர்களுள் பெரும்பான்மையோரின் சம்மதத்துடன் கூட்டாகச் சொந்தம் கொண்டுள்ள அத்தகைய காணித்துண்டின் முகாமையாளராக நியமிக்கலாம்.

(2) அத்தகைய முகாமையாளர், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரின் அதிகாரத்தையும், தத்துவங்களையும் கடப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) முகாமையாளரின் கடமைகளுள் பின்வருவன அடங்குதல் வேண்டும் :—

(அ) சொல்லப்பட்ட காணித்துண்டை அதிகபட்ச உற்பத்தியாக்கத்திற்கு உசிதமான நிலையில் பேணுதல் ;

(ஆ) அத்தகைய காணித்துண்டிலிருந்து திரண்ட இலாபங்களை, எவையேனும் செலவுகளையும் அத்தகைய முகாமைத்துவத்திற்கென அவருக்கு வருமதியான கட்டணங்களையும் செலுத்தித் தீர்த்தபின் பயனுகரிகளிடையே, அவர்களது கூட்டுச் சொத்தாண்மையின் பங்குகளுக்கிணங்க பிரித்துக் கொடுத்தல் ;

(4) முகாமையாளரின் தத்துவமானது அத்தகைய காணித்துண்டின் அபிவிருத்திக்கென நிதி திரட்டுவதற்கு கூட்டுச் சொந்தக்காரர்களின் சம்மதத்துடன் அத்தகைய காணித்துண்டை ஈடுவைப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

கூட்டுச் சொந்தக்காரர்களின் உரிமைகள்.

16. (1) கூட்டுச் சொந்தக்காரர்கள் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பயனுகரிகளின் உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பயனுகரிகளின் உரிமைகள், சொல்லப்பட்ட காணித்துண்டிலிருந்து இலாபங்களைப் பெறுவதற்கான உரிமையையும் உள்ளடக்குதல் வேண்டும்.

பயனுகரிகள் புதிய முகாமையாளரின் நியமனத்திற்கு வேண்டுகோளின் விடுக்கலாம்.

17. பயனுகரிகள், பின்வரும் ஏதுக்களின்மீது, கூட்டுப் பங்காளர் ஒருவரை கூட்டுச்சொந்த காணித்துண்டின் முகாமையாளராக நியமிக்கும்படி உரித்து நிர்ணய ஆணையாளருக்கு விண்ணப்பிக்கலாம் :—

(அ) முகாமையாளரின் முகாமைத்துவ சீர்கேடு அல்லது தீயெண்ணம் ; அல்லது

(ஆ) காணித்துண்டு அதிகபட்ச பயனுக்கு உட்படுத்தப்படுவதில்லை.



புதிய முகாமையாளரை, நியமிப்பதற்கு உரித்து நிர்ணய ஆணையாளருக்குள்ள தத்துவம்.

18. உரித்து நிர்ணய ஆணையாளர் —

(அ) முகாமைத்துவ சீர்கேட்டிற்கு அல்லது தீயெண்ணத்திற்கு முகாமையாளர் குற்றவாளியாவார் எனத் திருப்திப்படுவதன்மீது ;

(ஆ) காணித்துண்டு அதிகபட்ச பயனுக்கு உட்படுத்தப்படுவதில்லை எனத் திருப்திப்படுவதன்மீது ;

(இ) முகாமையாளரின் இறப்பின்மீது ; அல்லது

(ஈ) புதிய முகாமையாளர் ஒருவரை நியமிப்பது கூட்டுச் சொந்தக்காரர்களின் சிறந்த நன்மைக்கானதாகும் என உரித்து நிர்ணய ஆணையாளர் அபிப்பிராயப்படும்விடத்து,

சொல்லப்பட்ட காணித்துண்டை முகாமை செய்வதற்கு கூட்டுச் சொந்தக்காரர்களுள் பெரும்பான்மையோரின் சம்மதத்துடன் அத்தகைய கூட்டுச் சொந்தக்காரர்களிடையேயிருந்து புதிய முகாமையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

அரச காணியைப் பதிவு செய்தல்.

19. பதிவுசெய்ய முனையும் காணியானது, அரச காணியாக இருக்குமிடத்து, உரித்து நிர்ணய ஆணையாளர், விடயத்துக்கேற்ப எவையேனும் ஆதனவளிப்புகள், ஒதுக்குகள் அல்லது சொந்தைகள் பற்றிய விவரங்களுடன் அத்தகைய காணிக்கு அரசில் முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தொன்றின் பதிவுக்கான உரித்து அட்டவணையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

காணியிலுள்ள அக்கறையைப் பதிவு செய்தல்.

20. உரிமைக் கோரிக்கையாளரொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்படவுள்ள காணித் துண்டில் சொத்தாண்மைக்கான அல்லது அதில் அக்கறையொன்றுக்கான தமது உரிமைக் கோரிக்கையை நிலைநாட்டியுள்ளார் என உரித்து நிர்ணய ஆணையாளர் கருதுமிடத்து அவர், அத்தகைய அக்கறையின் சொந்தக்காரராகப் பதிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவரென அத்தகைய உரிமைக் கோரிக்கையாளரை வெளிப்படுத்துதல் வேண்டும்.

ஆயினும், இச்சட்டத்தின்கீழ் உரிமையாளரொருவராக பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவரென வெளிப்படுத்தப் பட்ட ஆளொருவர் ஏதேனும் சிறப்பான அல்லது ஆட்கள் பற்றிய சட்டத்திற்கு அமைவானவர் அல்லது கட்டுப்பட்டவர் என உரித்து நிர்ணய ஆணையாளர் கருதுகின்றவிடத்து, அவர் அத்தகைய சிறப்பான அல்லது ஆட்கள் பற்றிய சட்டத்திற்கு அத்தகைய ஆள் அமைவானவர் என வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் உரித்துப்பதிவேட்டில் அத்தகைய நிகழ்வுபற்றி குறிப்பொன்று செய்விக்கப்படச் செய்தல் வேண்டும்.

**உரிமைக் கோரிக்கைகளை மாவட்ட நீதிமன்றத் திற்கு ஆற்றுப்படுத்து தல்.**

21. உரிமைக் கோரிக்கைகளின் பிணக்கத்திற்குட்பட்ட இயல்பின் காரணமாக புலனாய்வுகள் மாவட்ட நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படுவது மேலும் பொருத்தமானதாகும் என புலனாய்வுகளின் நெறிமுறையின்போது உரித்து நிர்ணய ஆணையாளர் அபிப்பிராயமொன்றைக் கொள்ளுமிடத்து, அவர், புலனாய்வு செய்யப்படுவதற்கும் தீர்மானிக்கப்படுவதற்குமென அத்தகைய உரிமைக் கோரிக்கைகளை, காணி அமைந்துள்ள இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தலாம்.

**இடருற்ற உரிமைக் கோரிக்கையாளர் மாவட்ட நீதிமன்றத் திற்கு மேன்முறை யீடொன்றைச் செய்யலாம்.**

22. பதினாலாம் பிரிவின்கீழ் உரித்து நிர்ணய ஆணையாளரின் ஏதேனும் வெளிப்படுத்துகையால் இடருற்ற எவரேனும் உரிமைக் கோரிக்கையாளர் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள், காணி அமைந்துள்ள இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு அத்தகைய வெளிப்படுத்துகைக்கு எதிராக மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம்.

**மேலதிக நில அளவைகள்.**

23. (1) உரித்து நிர்ணய ஆணையாளர், நில அளவீடு சார்ந்த படம் அவரது அடுத்துறும் காண்புகளைப் பிரதி பலிப்பதற்கு எவையேனும் மேலதிக நில அளவைகள் அவசியமாகின்றன என அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய மேலதிக நில அளவைகளைச் செய்து அவசியமான எல்லை நிர்ணயங்களைப் பயனுறுத்துமாறு நில அளவையாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

(2) நில அளவையாளர் நாயகம், அவசியமான எல்லை நிர்ணயங்களைப் பயனுறுத்தல் வேண்டும் என்பதுடன் உரித்து நிர்ணய ஆணையாளரால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய நில அளவைகளை நடத்தி அத்துடன் மீளாய்வு செய்யப்பட்ட நில அளவீடு சார்ந்த படத்தை உரித்து நிர்ணய ஆணையாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.



**நீதிமன்றத்தின் கட்டளைகள்.**

24. மாவட்ட நீதிமன்றத்திற்கு 21 ஆம் பிரிவின்கீழ் ஆற்றுப்படுத்துகையொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது 22 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீடொன்று முன்வைக்கப் பட்டுள்ளவிடத்து, மாவட்ட நீதிமன்றம் முறையான விசாரணை யின் பின் பின்வரும் கட்டளைகளுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளை ஆக்கலாம் :—

(அ) பதினாலாம் பிரிவிற்கிணங்க உரிமைக் கோரிக்கை யாளரொருவருக்குச் சார்பான உரிமை கோரப்பட்ட முழுக் காணித்துண்டுக்கும் அல்லது அத்தகைய காணித்துண்டின் பிரிக்கப்பட்ட பாகமொன்றுக்கு உரித்து வெளிப்படுத்துகைக் கட்டளை ஆயினும் அத்தகைய பிரிக்கப்பட்ட காணித்துண்டு விதித்து ரைக்கப்பட்ட ஆகக்குறைந்த பரப்பளவிற்குக் கீழ்ப்பட்டதாகக் கூடாது ;

(ஆ) உரிமைக் கோரிக்கையாளர்களிடையே முழுக் காணித்துண்டின் அல்லது காணித்துண்டின் பிரிக்கப்பட்ட ஒரு பகுதியின் விற்பனைக்கான கட்டளை ; ஆயினும் அத்தகைய பிரிக்கப்பட்ட காணித்துண்டு விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த பரப்பளவிற்குக் கீழ்ப்பட்டதாகக் கூடாது ;

(இ) உரிமைக் கோரிக்கையாளர் ஒவ்வொருவராலும் அல்லது எவராலும் செலுத்தப்படற்பாலது தோதானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறு வழக்குச் செலவுகளுக்கான கட்டளை.

**நில அளவையாளர் நாயகத்திற்கு ஆணை.**

25. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மாவட்ட நீதிமன்றமொன்றுக்குச் செய்யப்பட்ட ஓர் ஆற்றுப்படுத்துகை யின்மீது அல்லது மேன்முறையீட்டின்மீது அத்தகைய நீதிமன்றமானது, அத்தகைய நீதிமன்றங்களின் கட்டளைகளுக்குப் பயனளிப்பதற்கு அவசியப்படுகின்றவாறான அத்தகைய மேலதிக நில அளவைகளையும் அத்துடன் நில அளவீடு சார்ந்த படங்களின் திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறு நில அளவையாளர் நாயகத்திற்கு ஆணையொன்று வழங்குதல் வேண்டும்.

(2) நில அளவையாளர் நாயகம், அத்தகைய ஆணையை நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவுக்கு அவரது விவரத்திரட்டைச் செய்து அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை செலவுப் பட்டியலொன்றுடன் சேர்த்து மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்புதலும் வேண்டும்.

(3) மாவட்ட நீதிமன்றம் அத்தகைய விபரத்திரட்டு ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றதன்மீது, நில அளவையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட செலவுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டவாறு நில அளவைக் கட்டணம் உரிமைக் கோரிக்கையாளர்களால் செலுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(4) மாவட்ட நீதிமன்றம் அது விற்பனையொன்றைக் கட்டளையிட்டுள்ளவிடத்து, அத்தகைய விற்பனைக்கான ஆணையொன்றினை உரிமம்பெற்ற ஏலதாரர் ஒருவருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய ஏலதாரர் அதன் பொருட்டு ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய முறையில் விற்பனையை நடாத்த முற்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணைக்குழுவுக்கு அவரது விபரத்திரட்டைச் செய்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவுக்கு அத்தகைய விபரத்திரட்டு கிடைக்கப்பெற்றதன்மீது மாவட்ட நீதிமன்றம், கொள்வனவுப் பணமும் ஏலதாரரின் கட்டணங்களும் ஆகக்கூடுதலான கூறு விலையைச் சமர்ப்பித்த ஆளினால் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்படுவதற்கு கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(6) நில அளவைக் கட்டணமும் கொள்வனவுப் பணமும் ஏலதாரரின் கட்டணமும் வைப்பீடு செய்யப்படுவதன்மீது மாவட்ட நீதிமன்றமானது :

(அ) (i) நில அளவையாளர் நாயகத்திற்கு நில அளவைக் கட்டணத்தின் கொடுப்பனவையும் ;

(ii) சம்பந்தப்பட்ட உரிமைக் கோரிக்கையாளர்களிடையே அவர்களது உரிமைக் கோரிக்கைகளுக்கிணங்க கொள்வனவுப் பணம் பிரித்துக் கொடுக்கப்படுவதையும் ; அத்துடன்

(iii) சம்பந்தப்பட்டவரான உரிமம் பெற்ற ஏலதாரருக்கு ஏலதாரரின் கட்டணத்தின் கொடுப்பனவையும் கட்டளையிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எந்தக் காணித்துண்டுகள்மீது நியாயத் தீர்ப்பளிக்கப்பட்டதோ அந்தக் காணித்துண்டுகளுக்கான உரித்தைத் தீர்மானிக்கும் தீர்வையைப் பதிதலும் ; அத்துடன்

(இ) அத்தகைய தீர்வையின் பிரதியொன்றை உரித்து நிர்ணய ஆணையாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.



*புலனாய்வுகளின் முடிவில் உரித்தின் அட்டவணைகள் உரித்துப் பதிவாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பது.*

26. இச்சட்டத்தின் 13 ஆம், 21 ஆம் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட புலனாய்வுகளின் முடிவில் அல்லது 22 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளின் முடிவில் உரித்து நிர்ணய ஆணையாளர் உரித்தின் அட்டவணைகளைத் தயாரித்தலும் அத்துடன் அத்தகைய அட்டவணைகளை நில அளவையாளர் தலைமை அதிபதிக்கு அவரது பதிவுகளை மீளாய்வு செய்வதற்காக அதன் பிரதியுடன் தோதான உரித்துப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

*அட்டவணைகளின் உள்ளடக்கங்கள் இடாப்பில் பதியப்படல் வேண்டும் என்பது.*

27. (1) உரித்துப் பதிவாளர், 26 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரித்து அட்வணைகள் கிடைக்கப்பெற்றதன்மீது அத்தகைய அட்டவணைகளின் உள்ளடக்கங்களை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவரால் பேணப்படும் உரித்து இடாப்புகளில் பதிவுச் செய்வித்தல் வேண்டும்.

(2) அத்தகைய பதிவுகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் காணிகளுக்கான உரித்தின் பதிவு சம்பந்தமான ஆரம்பப் பதிவுகளாதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதியப்படுதல் ஆகாது என்பது.*

28. இச்சட்டத்தின்கீழ் உரித்துப் பதிவேடுகள் திறக்கப்படும் தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பதிவுகள் எவையும் (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பேணப்படும் காணி இடாப்புக்களில் பதியப்படுதல் ஆகாது; ஆனால் அத்தகைய இடாப்பு அத்தகைய காணி தொடர்பிலானவையும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பேணப்படுபவையுமான உரித்து இடாப்புகள் பற்றிய எதிர்க் குறிப்பீடொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*பதிவினால் இடருற்ற ஆள் மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்பது.*

29. (1) ஏதேனும் காணித் துண்டுகளுக்கான இரண்டாம் வகுப்புச் சொத்தாண்மை உரித்துடைய ஆளொருவரின் உரித்துப் பதிவினால் இடருற்ற ஆளெவரும் அத்தகைய பதிவின் தேதியிலிருந்து பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குள் அத்தகைய காணி அமைந்துள்ள இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் பதிவின் திருத்தத்திற்கு வழக்கொன்றைத் தொடரலாம்.

(2) அத்தகைய வழக்குபற்றிய அறிவித்தல் உரித்து இடாப்பின் பாரபந்தப் பகுதியில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வழக்கு முடியும்வரை பதியப் பட்டவாறே இருத்தலும் வேண்டும்.

(3) அத்தகைய வழக்கு பற்றிய அறிவித்தல் எந்த ஆளுடைய இரண்டாம் வகுப்புச் சொத்தாண்மை உரித்து அவ்வாறு பதியப்பட்டதோ அந்த ஆளுக்கும் அத்துடன் உரித்து நிர்ணய ஆணையாளருக்கும் நில அளவையாளர் நாயகத்திற்கும் உரித்துப் பதிவாளருக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*மாவட்ட நீதிமன்றம் இடாப்பின் திருத்தத்துக்குக் கட்டளையிடுகின்றது.*

30. (1) மாவட்ட நீதிமன்றம், உரிய விசாரணையின் பின்னர் விடயத்தின் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறு கட்டளையிடுதல் வேண்டும்.

(2) (அ) இரண்டாம் வகுப்புச் சொத்தாண்மை உரித்துடன் பதிவு செய்யப்பட்ட ஒரு காணித் துண்டு தொடர்பில் மாவட்ட நீதிமன்றம் உரித்து இடாப்பின் திருத்தத்துக்குக் கட்டளை யிடும்விடத்து, அத்தகைய கட்டளை உரித்துப் பதிவாளருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்; அவர் இடாப்புக்கான அத்தகைய திருத்தம் பயனுறுத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றத்தின் அத்தகைய கட்டளை உரித்து நிர்ணய ஆணையாளருக்கும் நில அளவையாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்படுதலும் வேண்டும்.

*உரித்தை முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தொன்றாக மாற்றுதல்.*

31. (1) இரண்டாம் வகுப்புச் சொத்தாண்மை உரித்துடன் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லது அவர் மூலமான உரித்துக்கு உரிமைகோரும் ஆளொருவர், அத்தகைய பதிவி லிருந்து பத்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின் முடிவில் இடைவரு காலப்பகுதியின்போது அத்தகைய பதிவுக்கெதிரான 29 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீடு எதுவும் இல்லாவிடில், அவரது பதிவை முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தொன்றாக மாற்றுவதற்குத் தகுதியுடைய வராதல் வேண்டும்.



(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் முடிவில், உரித்து நிர்ணய ஆணையாளர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, அத்தகைய ஆள் முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தொன்றுடன் பதிவு செய்வதற்குத் தகுதியுடையவராக இருப்பதாக அத்தாட்சிப்படுத்தி உரித்தின் அட்டவணையொன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உரித்தின் அட்டவணையை தோதான உரித்துப் பதிவாளருக்கும் அத்துடன் நில அளவையாளர் நாயகத்திற்கும் அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) உரித்துப்பதிவாளர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் உரித்தின் அட்டவணையொன்று கிடைக்கப்பெற்றதன்மீது அத்தகைய ஆளை அத்தகைய உரித்தின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட காணித் துண்டுக்கு முதலாம் வகுப்பு முற்றுரிமைச் சொத்தாண்மை உரித்தொன்றுடன் பதிவு செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க உரித்து நிர்ணய ஆணையாளருக்கும் அத்துடன் நிலஅளவையாளர் தலைமையதிபதிக்கும் அறிவித்தலும் வேண்டும்.

*பதிவு செய்வதன் பயன்.*

32. (1) காணித் துண்டொன்றுக்கு முற்றுரிமைச் சொத்துவத்து டன் கூடிய முதலாம் வகுப்பு உரித்துடன் ஆளொருவரைப் பதிவுசெய்வது, உரித்து இடாப்பின் பாரபந்தங்கள் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு நிலவும் எவையேனும் உரிமைகளுக்கு அமைய அத்தகைய காணியின் முற்றுரிமைச் சொத்துவத்தை அதற்குச் சொந்தமான அல்லது அதனோடு சேர்ந்த எல்லா உரிமைகளுடனும் சிறப்புரிமைகளுடனும் சேர்த்து அவ்வாளுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) காணித் துண்டின் உரிமையாளராக அல்லது காணித் துண்டின் அக்கறையொன்றைக் கொண்ட அல்லது அத்தகைய காணிமீது பொறுப்பொன்றை அல்லது பாரபந்தமொன்றை அல்லது அக்காணியின் முகாமையாளர் அல்லது நன்மை பெறுபவர் ஒருவராக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவரைப் பதிவு செய்தல், அதற்குச் சொந்தமான அல் லது அதனோடு சேர்ந்த எல்லா உரிமைகளுடனும் சிறப்புரிமை களுடனும் சேர்த்து, அவை வெளிப்படையாக இருந்தாலென்ன அல்லது உட்கிடையாக இருந்தாலென்ன, அது தொடர்பிலான எவையேனும் வெளிப்படையான உடன்படிக்கைகளுக்கு அமைவாக, அவ்வாளுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

உரித்து இடாப்பில் உள்ள பதிவுகள் அதில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளின் முடிவான சான்றாதல் வேண்டும்.

33. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பேணப்படும் உரித்து இடாப்பில் உள்ள பதிவுகள், அத்தகைய பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள உரிமைகள் அல்லது பொறுப்புகள் ஏலவே இருப்பதற்கான முடிவான சான்றாதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறு தவிர நீதிமன்றமொன்றில் வினாவுக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

(2) ஏவ்வாளின் பெயர் உரித்து இடாப்புக்களில் காணப்படுகின்றதோ அவ்வாளின் அக்கறைகள், இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு மாத்திரமே வினாவுக்குட்படுத்தப்படலாம் என்பதுடன் அவை, உரித்து இடாப்பில் காணப்படும் அக்கறைகள் மற்றும் உரிமைக் கோரிக்கைகளும் தவிர்ந்த மற்றெல்லா அக்கறைகளும் உரிமைக் கோரிக்கைகளும் இல்லாமல் அதற்குச் சொந்தமான அல்லது அதனோடு சேர்ந்த எல்லா உரிமைகள், சிறப்புரிமைகள் ஆகிய எல்லாவற்றுடனும் சேர்த்து அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

## இடாப்பைப் பார்வையிடுதலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் வழங்குதலும்

இடாப்பையும் நிலவுடைமைப் படத்தையும் பார்வையிடுதல்.

34. (1) ஆளெவரும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்தலும் மேலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன் மேலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பேணப்படும் உரித்து இடாப்பு அத்துடன் நிலவுரிமைப்படம் எதனையும் அலுவலக நேரங்களின்போது பார்வையிடலாம்.

(2) ஆளெவரும் இயைபான உரித்துப் பதிவுகாரருக்கு விண்ணப்பம் செய்ததன்மேலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன் மேலும் அத்தகைய உரித்து இடாப்பில் பிரித்திடுகையொன்றை அத்தகைய உரித்துப் பதிவாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஆளெவரும், இயைபான நிலஅளவைக் கண்காணிப்பாளருக்கு விண்ணப்பம் செய்ததன் மேலும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன் மேலும், உரித்துப் பதிவு செய்வதற்கு உபயோகிக்கப்படும் நிலவுடைமைப்படம் எதனதும் பிரதியொன்றை, நிலஅளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.



பதிவாளரினால் அத்தாட்சிப் படுத்தப்படுதல் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

35. (1) உரித்துப் பதிவுகாரர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதெனக் கொள்ளப்படும் ஆவணம் ஒவ்வொன்றும் அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றதென எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், அது எவ்விடயம் தொடர்பானதோ அவ்விடயம் தொடர்பில் அத்தகைய விடயம்பற்றி மேலும் எண்பிப்பு ஏதுமின்றி முதற்றோற்றச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) நில அளவையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரின் சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதெனக் கொள்ளப்படும் நிலவுரிமைப்படத்தின் பிரித்திடுகை ஒன்றின் பிரதி ஒவ்வொன்றும், எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும் அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அது எவ்விடயம் தொடர்பானதோ அவ்விடயம் தொடர்பில், முதற்றோற்றச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(3) உரித்துப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடாப்பிலும் நிலவுரிமைப்படத்திலும் உள்ள பதிவு அல்லது குறிப்பு ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எல்லா வழக்கு நடவடிக்கைகளிலும், அதில் பதிவு செய்யப்பட்டிருக்கும் விடயத்திற்கு அல்லது நடவடிக்கைக்கு முடிவான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

## உப பிரிவும் இணைப்பும்

அலகுகளை உப பிரிவாக்குதல் அல்லது இணைத்தல்.

36. (1) ஏதேனும் காணித் துண்டின் அல்லது காணித் துண்டுகளின் எச்சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் உரித்து இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கிறதோ அச்சொந்தக்காரர் எவரும் அல்லது சொந்தக்காரர்கள் எவரேனும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அத்தகைய காணி தொடர்பில் மீளப்பிரிப்பு அல்லது இணைப்பு அல்லது உபபிரிவு வரைபடம் ஒன்றைப் பதிவுசெய்வதன் மூலம் அவரது அல்லது அவர்களது காணியை இணைக்கலாம் அல்லது உபபிரிவாக்கலாம்.

(2) இணைப்புக்கான அல்லது உபபிரிவுக்கான விண்ணப்பமொன்று இயைபான நில அளவைக் கண்காணிப்பாளருக்கான ஒரு பிரதியுடன் உரித்துப் பதிவுகாரரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அது விண்ணப்பகாரரால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படும் வெளிப்படுத்துகையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும். இவ்வெளிப்படுத்துகை பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(அ) காணியை அல்லது காணிகளைப் பாதிக்கின்ற மாரபந்தம், முடிவுறா வழக்கு, கைப்பற்றல், கட்டளை அல்லது தீர்வை ஒவ்வொன்றும் பற்றிய (அப்படி எதுவும் இருந்தால்) விபரங்கள்;

(ஆ) அத்தகைய காணித் துண்டு அல்லது காணித் துண்டுகள் தொடர்பில் உரித்து இடாப்பிலுள்ள குறிப்பீடொன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ள நிலவுரிமைப்படம் பற்றிய குறிப்பீடொன்றும்;

(இ) அத்தகைய இடப்பரப்பைக் காட்டுகின்ற நிலவுரிமைப் படத்துக்குக் குறிப்பீடொன்றைக் கொண்டிருக்கும் அத்தகைய காணியின் அல்லது காணிகளின் இணைப்பை அல்லது உபபிரிவைக் காட்டுகின்ற அத்தகைய நில அளவை செய்தலையும் அத்தகைய நிலவுரிமைப் படங்களைத் தயாரித்தலையும் ஆளுகின்ற ஏதேனும் ஒழுங்குவிதிக்கு இணங்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர் ஒருவரினால் தயாரிக்கப்பட்ட ஒரு நில அளவை வரைபடம்.

(3) வரைபடமானது நில உரிமைப் படத்துக்கும் அத்தகைய நில அளவைகளையும் நில உரிமைப் படத்தையும் ஆளுகின்ற ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் இணங்க இருக்கிறதென நில அளவைக் கண்காணிப்பாளர் திருப்திப்படுகின்றவிடத்து, அவர், அதற்கிணங்க, அத்தகைய வரைபடத்தைச் சமர்ப்பித்த ஆளுக்கு அதுபற்றி அறிவித்தல் வேண்டும் என்பதுடன்,

(4) சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தின் மூலப்பிரதி வெளிக்களக் குறிப்புகள் மற்றும் சொந்தக்காரர்களின் வேண்டுகோள் ஆகியன நில அளவைக் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் கோப்பிடப்பட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(5) (அ) நில அளவைக் கண்காணிப்பாளரிடமிருந்து நில உரிமைப் படமொன்றின் ஓர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி கிடைக்கப்பெற்றதன் மேல், உரித்துப் பதிவுக்காரர், அத்தகைய உபபிரிவுக்கென அல்லது இணைப்புக்கென அத்தகைய விண்ணப்பம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க இருக்கிறதெனத் திருப்திப்பட்டால், அவர் அத்தகைய காணித் துண்டு அல்லது காணித் துண்டுகளை வரைபடத்தை, அத்தகைய காணி தொடர்பிலான முந்திய பக்கங்களுக்குச் செய்யப்படும் செம்மையான குறுக்குக் குறிப்பீடுகளுடன் உரித்து இடாப்பில் பதிவுசெய்தல் வேண்டும்.

(ஆ) பெறப்படும் விண்ணப்பமும் ஆவணங்களும் இயைபான காணித்துண்டுக் கோப்பில் உரித்துப் பதிவுக்காரரினால் கோப்பிடப்படுதல் வேண்டும்.



36. இணைப்பின் அல்லது உபபிரிவின் வரைபடமொன்றைப் பதிவுசெய்ததன்மேல் —

(அ) அதில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டு அல்லது காணித் துண்டுகள் அதில் வரையறுக்கப்பட்டவாறு இணைக்கப்பட்டுள்ளதாக அல்லது உபபிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய காணித் துண்டு அல்லது காணித் துண்டுகள் பொறுப்புக்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இணைப்பு அல்லது உபபிரிவு வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய காணித் துண்டு அல்லது காணித் துண்டுகள் தொடர்பிலான மூல நிலவுரிமைப் படத்தில் அத்தகைய காணித் துண்டு அல்லது காணித் துண்டுகளைப் பாதிக்கின்ற நன்மையையும் எவையேனும் சேவகங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

37. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட காணித் துண்டில் சொத்துவத்துக்கான அல்லது வேறு அக்கறைக்கான உரித்தொன்றை உடைய ஆள் எவரும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன்மேல் அத்தகைய சொத்துவம் அல்லது அக்கறை தொடர்பில் உரித்துச் சான்றிதழ் ஒன்றை பதிவாளர் உரித்துப் பதிவுகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். உரித்துச் சான்றிதழ்கள்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, அத்தகைய உரித்துச்சான்றிதழானது அத்தகைய அக்கறைக்கான உரித்துக்கு முடிவான சான்றாக அமைதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட காணி தொடர்பிலான நடவடிக்கைகள்

38. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்படும் ஏதேனும் காணித் துண்டில் ஓர் அக்கறையைக் கொள்ளுகின்ற ஆள் எவரும், அத்தகைய உரித்து அல்லது அக்கறையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டாலொழிய அத்தகைய உரித்துக்கு அல்லது அக்கறைக்கு உரித்துடையவர் ஆதல் ஆகாது. பதிவு செய்யப்பட்டாலொழிய காணியில் அக்கறை கொள்ளப்படமாட்டாது.

காணி தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள் இச்சட்டத்திற்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

39. எந்தக் காணித் துண்டுக்கான உரித்தானது, இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்தக் காணி எதுவும் அல்லது அதனகத்துள்ள அக்கறைகள் எதுவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத்தவிர, கைமாற்றப்படுதலோ அல்லது கையாளப்படுதலோ ஆகாது என்பதுடன், வேறுவகையாகக் கையுதிர்க்கப்பட்ட ஒவ்வொரு கையுதிர்த்தலும் வறிதாதலும் வேண்டும்.

பதிவு செய்வதற்கான சாதனம் யார் முன்வைக்கலாம் என்பது.

40. (1) அக்கறையை கைமாற்றுகின்ற ஒரு சாதனம், உரித்துப் பதிவாளருக்கு, இச்சட்டத்தின்கீழ் உரித்துப் பதிவுசெய்வதற்கென பின்வருபவர்களினால் முன்வைக்கப்படலாம் :—

(அ) அதன்கீழ் ஏதேனும் அக்கறைக்கு அல்லது நன்மைக்கு உரிமைக்கோரிக்கை விடுக்கும் எவரேனும் ஆள் ;

(ஆ) அதனால் பாதிக்கப்பட்ட ஏதேனும் காணியின்மீது ஏதேனும் அக்கறை அல்லது பொறுப்புடைய எவரேனும் ஆள் ;

(இ) அத்தகைய சாதனத்தை அத்தாட்சிப்படுத்தும் எவரேனும் ஆள்.

(2) ஒரு சாதனம் ஏதேனும் தோதான கட்டணத்துடன் இருப்பின் அஞ்சல் அல்லது உறையில் இடப்பட்டு பதிவுக்கென முன்வைக்கப்படலாம்.

"நாளேடு"

41. (1) உரித்துப் பதிவாளர்கள் ஒவ்வொருவரும், "நாளேடு" என அழைக்கப்படும் ஒரு புத்தகத்தை வைத்திருத்தல் வேண்டும். அதில், நாள், மணித்தியாலம் என்பவற்றுடன் பதிவுக்கு முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு சாதனத்தின் குறித்துரைக்கப்பட்ட விவரங்களைப் பதிவுசெய்தல் வேண்டும். அத்துடன் சாதனத்தை முன்வைக்கும் ஆளினால் தேவைப்படுத்தப்பட்டால் முன்வைக்கும் குறிப்பு என்பன பதியப்படுதல் வேண்டும். அத்துடன் முன்னுரிமை நோக்கத்திற்காக முன்வைக்கப்படும் நேரம் பதிவுசெய்யும் நேரமாக எடுக்கப்படுதல் வேண்டும்.

(2) அஞ்சல் மூலம் அல்லது உறையில் இடப்பட்டு பதிவுக்கென முன்வைக்கப்படும் சாதனம் ஒன்று, சாதனம் வைக்கப்பட்டுள்ள சிப்பம் திறக்கப்படும் நேரம் பதிவுக்கென முன்வைக்கப்பட்ட நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.



முந்திய உரித்து.

42. (1) இடாப்பில் காணப்படும் காணித் துண்டுக்கான உரித்து அல்லது காணி தொடர்பிலான ஏதேனும் அக்கறை, எந்த வரிசையில் அத்தகைய உரித்துக்கான அல்லது அக்கறைக்குரிய சாதனமானது இடாப்பில் உள்ள சாதனங்களின் தேதியையும், பதிவுத்தேதியையும் பொருட்படுத்தாது பதிவுக்காக முன்வைக்கப்பட்டுள்ளனவோ, அந்த வரிசைக்கிணங்க முந்துரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

காணித் துண்டுகள் தொடர்பிலான சாதனங்களின் படிவம்.

43. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்வதற்காக முன்வைக்கப்பட்ட காணித் துண்டில் உரித்தை அல்லது ஏதேனும் அக்கறையைக் கைமாற்றுகின்ற சாதனம் ஒவ்வொன்றும், அந்த நோக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், தயாரிக்கப்பட்ட சாதனங்கள் கொடுக்கல் வாங்கல்களுக்கான திறத்தவர்களாலும் இரு சாட்சிக்காரர்களாலும் கையொப்பமிடப்பட்டு, பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படலும் வேண்டும் என்பதுடன் அரச காணி தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கடமைகள்.

44. இச்சட்டத்தின் நியதிகளுக்கமைய சாதனம் ஒன்றை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு ஒருவர் —

(அ) கொடுக்கல் வாங்கல்களுக்கான திறத்தவர்கள் எவராயினும் அவர்களினதும் அவர் அறியாமலிருக்கக்கூடியவர்களான சாட்சிக்காரரினதும் ஆளடையாளம் தொடர்பாக, அவர்களது அலுவலக முறையான ஆளடையாள அட்டைகளை அல்லது அவர்களின் ஆளடையாளத்தை நம்பக்கூடியவாறாக வெளிப்படுத்தும் அத்தகைய வேறு உபாயங்கள் மூலம் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் ;

(ஆ) உரித்துப் பதிவகத்தில் உள்ள பதிவேடுகளைக் குறிப்பீடுசெய்வதன்மூலம் அல்லது இயைபான உரித்து இடாப்பிலிருந்தான பிரித்தெடுத்த பகுதியொன்றைக் குறிப்பீடு செய்வதன்மூலம், சாதனத்தின் திறத்தவர்களின் தன்மைபற்றித் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் ; அத்துடன்

(இ) அத்தகைய சாதனத்தில் கையாளப்படும் காணித் துண்டின் அடையாளத்தையும் உரித்தின் நிலைமையையும் உரித்துப் பதிவாளரால் வழங்கப் பட்ட உரித்துச் சான்றிதழுடனும் உரித்துப் பதிவகத்தி லுள்ள பதிவேடுகளுடனும் குறிப்பீடுசெய்து தம்மைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

அத்தாட்சிப்படுத் தப்பட்ட சாதனம் கணிப் பிரசித்த நொத்தாரிசு ஏழு நாட்களுக்குள்ளாக அனுப்பி வைத்தல்.

45. (1) (அ) விற்பவரின் உரித்துத் தொடர்பிலான உரித்துச் சான்றிதழுடன் சேர்த்து 44 ஆம் பிரிவின் நியதிகளின்படி, அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனம், கையாளப்பட்ட காணித் துண்டினது எந்த உரித்துப் பதிவாளரது நியாயாதிக்க இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அந்த உரித்துப் பதிவாள ருக்கு உறுதிப்படுத்தும் பிரசித்த நொத்தாரிசுவினால் அத்தகைய அத்தாட்சிப்படுத்துகையிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள்ளாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அத்தாட்சிப் படுத்தப்பட்ட சாதனத்தை அனுப்பிவைக்கத் தவறுதல், எட்டாவது நாளிலிருந்து உரித்துப் பதிவாளருக்கு அத்தகைய சாதனம் எந்தத் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்டதோ அந்தத் தேதிவரையிலான ஒவ்வொரு வேலைநாளுக்கும், நூறு ரூபா வைக் கொண்ட தண்டப்பணத்தினால் தண்டிக்கப்படற்பால தான தவறொன்றாதல் வேண்டும்.

(2) உரித்துப் பதிவாளரானவர், இச்சட்டத்தின்கீழ் அவரால் பேணப்பட்டுவரும் ஏடுகளில் அத்தகைய சாதனத்தைப் பெற்றுக்கொண்டமை பற்றிப் பதிவுசெய்தல் வேண்டுமென்பது டன் பின்வருவன பற்றித் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும் :—

(அ) சாதனமானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வரையப்பட்டிருக்கின்றது என்பது ;

(ஆ) காணித் துண்டானது, அடையாளங் காணப்பட்டுள் ளது என்பதுடன் உரித்துப் பதிவகத்தில் உள்ள இடாப்பிலிருக்கும் அத்தகைய காணித் துண்டின் விவரணத்துடன் செம்மையாக விவரிக்கப்பட்டும் அத்துடன் இசைவானதாகவும் உள்ளது எனவும் ;



(இ) அத்தகைய உரித்தை அல்லது அக்கறையை கைமாற்றுகின்ற ஆள், உரித்துப்பதிவகத்தில் உள்ள இடாப்புகளில் கிடைக்குந் தகவினதான தகவலுக் கிணங்க அத்தகைய சாதனத்தை எழுதி நிறை வேற்றுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளார் என்பதும்.

(ஈ) கைமாற்றப்பட்ட அல்லது கையாளப்பட்ட உரித்து அல்லது அக்கறை இரட்டுறமொழியாமல் இனங்காணப்பட்டுள்ளதுவென்பதுடன் உரித்துப் பதிவகத்தில் உள்ள இடாப்புகளில் பதியப்பட்டி ருப்பவற்றுக்கு இசைந்தனவாகவுமுள்ளன என்ப தும்.

(3) உரித்துப் பதிவாளர், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்வதற் கான எல்லாத் தேவைப்பாடுகளும் இணங்கியொழுகப் பட்டனவெனத் திருப்திப்பட்டால், அவர் அத்தகைய உரித்தை அல்லது அக்கறையை விதித்துரைக்கப்பட்ட விதத்தில் பதிவுசெய்து, அத்தகைய உரித்தை அல்லது அக்கறையை உருவாக்கும் அல்லது கைமாற்றும் சாதனத்தையும், விற்பவரால் சமர்ப்பிக்கப்படும் உரித்துச் சான்றிதழையும் இயைபான காணிக்கோப்பில் கோப்பிட்டு, எந்த ஆள் சாதனத்தைச் சமர்ப்பித்தாரோ அந்த ஆளுக்கு உரித்துச் சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும்.

ஆயின், அத்தகைய சாதனம் ஒரு குத்தகையை அல்லது ஈடொன்றைத் தொடர்புபடுத்துமிடத்து, பழைய உரித்துச் சான்றிதழும், அத்தகைய குத்தகை அல்லது ஈடுபற்றிக் குறிப்பிட்டு, உரித்துப்பதிவாளரினால் செய்யப்பட்ட புறக்குறிப் பொன்றுடனும் அத்தகைய ஆளுக்குத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும். உரித்துப் பதிவாளர், அத்தகைய பதிவு பூர்த்தியாக்கப்பட்டதன்மேல், அத்தகைய எல்லாப் பதிவுகள் பற்றியும் உடனடியாக நில அளவையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

எதிர்காலத்தில் கைமாற்றும் சாதனத்தை உரித்துப் பதிவாளர் பதிவலாகாது.

46. உரித்துப்பதிவாளர் எதிர்காலம் எதிலும் ஏதேனும் நிகழ்வு சம்பவித்ததன்மேல் அல்லது ஏதேனும் நிபந்தனை பூர்த்தியானமையின்மீது, காணித் துண்டுக்கான ஏதேனும் உரித்தை அல்லது உரிமையைக் கைமாற்றுகின்றதாகக் கொள்ளப்படும் சாதனம் எதனையும் பதிவுசெய்தலாகாது.

ஆயின், எவ்வாறாயினும் சீவிய உரித்துக்கு அமைவானதான உரித்துக் கைமாற்றுகையொன்று பதிவுசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும்.

புதிய தொடப்புகள் திறக்கப்பட்டாலன்றி காணியின் பாகம் கைமாற்றப்படலாகாது.

47. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முதலாம் வகுப்புப் பூரண சொத்தாண்மையுரித்துடன் அல்லது இரண்டாம் வகுப்புச் சொத்தாண்மையுரித்துடன் பதிவுசெய்யப்பட்ட காணித்துண்டின் பாகமெதுவும் அத்தகைய காணியைப் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் முதலில் உபபிரிவு செய்தாலன்றியும் அத்துடன் அவ்வாறு உபபிரிவு செய்யப்பட்ட காணியின் அத்துண்டு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழியவும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உபபிரிவு தொடர்பாக உரித்து இடாப்பில் புதிய இடாப்புகள் திறக்கப்பட்டிருந்தாலொழிய கைமாற்றப்படுதலோ, வேறுவகையாகக் கையாளப்படுதலோ ஆகாது.

இணைச்சொந்தாண்மையை அளிக்கும் சாதனம் வறிதாதல்.

48. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தவிர இச்சட்டத்தின் கீழ் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களுக்குச் சாதகமாக பதிவுசெய்யப்பட்ட காணித் துண்டொன்றின் சொத்துவம் தொடர்பிலான சாதனமொன்று வறிதாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதலுமாகாது.

பதிவுசெய்தலின்மீது சாதனம் பயனுறுதல்.

49. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு காணித் துண்டு தொடர்பாக, எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், அத்தகைய சாதனம் பதிவுசெய்யப்பட்டதன்மீது பயனுறுவதாதல் வேண்டும்.

## படிமுறையான உரித்துக்கள்

கட்டிடங்களின் கிடையான உப பிரிவுகளைப் பதிவுசெய்தல்.

50. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்திற்கும் அமைவாக இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டதான எந்தக் காணித் துண்டின்மீது, ஒரு தட்டுக்கு மேற்பட்ட தட்டுகளைக்கொண்ட கட்டிடமொன்று நிருமாணிக்கப் பட்டுள்ளதோ அல்லது நிருமாணிக்கப்படவுள்ளதோ அந்தக் காணியெதனதும் சொந்தக்காரர் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதன்மேல் விதித்துரைக்கப்பட்ட வடிவத்தில் அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப் படவேண்டியவொரு கூட்டாட்சி ஆதன வரைபடம் என அழைக்கப்படும் கூறு அளவு வரைபடம் ஒன்றுக்கிணங்க (இதனகத்துப்பின்னர் "கூட்டாட்சி ஆதனத்துண்டுகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டிடங்களின் கிடையான உப பிரிவுகளைப் பதிவுசெய்வதற்காக விண்ணப்பம் செய்யலாம்.



(2) காணியின் காணித்துண்டுக் குறிப்பீட்டு இலக்கமும், கூறு அளவு வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறான கூட்டாட்சி ஆதனத்துண்டின் இலக்கமும் ஒன்றுசேர, கூட்டாட்சி ஆதனத்துண்டொன்றுக்குப் போதுமானதொரு குறிப்பீடாதல் வேண்டும்.

(3) உரித்துப்பதிவாளர் அத்தகைய விண்ணப்பங்களைக் கூட்டாட்சியாதன வரைபடத்துடனும், கூறு அளவு வரைபடத்துடனும் சான்றுப்படுத்துவதற்காக நில அளவைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

நில அளவைக் கண்காணிப்பாளரால் கூட்டாட்சி ஆதன வரைபடம் கோப்பிடப்படுதல்.

51. கூட்டாட்சி ஆதன வரைபடம், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தினதும், இச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் இசைவாக உள்ளது என நில அளவைக் கண்காணிப்பாளர் திருப்திப் பட்டதன்மேல், நில அளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் அத்தகைய வரைபடத்தை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் –

(அ) உரித்துப் பதிவுக்காகப் பயன்படுத்தப்பட்ட கூறு அளவு வரைபடத்தில் பொருத்தமான குறிப்பீடொன்றைச் செய்தபின்னர் கூட்டாட்சி ஆதன மூல வரைபடத்தினைக் கோப்பிடுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கூட்டாட்சி ஆதன வரைபடத்தின் இணைப் பிரதியையும் தோதான உரித்துப் பதிவாளருக்கான காணிச் சொந்தக்காரரின் விண்ணப்பத்தையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கூட்டாட்சி ஆதனத் துண்டைப் பதிவு செய்யும் முறை.

52. உரித்துப் பதிவாளரானவர், 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்படுக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தினதும், இச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் இசைவாக உள்ளதெனத் திருப்திப்பட்டால், அவர் —

(அ) கூட்டாட்சி ஆதன வரைபடத்தைக் காணித்துண்டுகள் கோப்பில் கோப்பிலிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டாட்சி ஆதனத்துண்டு ஒவ்வொன்று தொடர்பிலும், இடாப்பில் உரித்து இடாப்பு ஒன்றைத் திறத்தல் வேண்டுமென்பதுடன், அக்காணித்துண்டு எந்த இடாப்பில் பதிவுசெய்யப்பட்டதோ அந்த இடாப்புகளுக்குப் பொருத்தமான மாட்டேற்றும் குறிப்பீடுகளைச் செய்தலும் வேண்டும் ;

(இ) ஆதனப்பிரிவில் காணித் துண்டு தொடர்பான இடாப்பில் அதனகத்து அடங்கியுள்ள காணித் துண்டின் பொது ஆதனத்தை மாத்திரம் கொண்டுள்ளது என்பதைப் பதிதல் வேண்டும் ;

(ஈ) பாரபந்தங்கள் பிரிவில், கூட்டாட்சி ஆதனத் துண்டுகள் தொடர்பில் இடாப்புகள் திறக்கப்பட்டுள்ளனவெனப் பதிவுசெய்தலும் வேண்டும் ; அத்துடன்

(உ) அத்தகைய கூட்டாட்சி ஆதனத் துண்டுகள் பதிவு செய்யப்பட்டனவென்பதுடன், இயைபான இடாப்புகளின் இயைபான குறிப்பீடு இலக்கங்களையும் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஊ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தை அறவிட்டபின்னர் உரித்துச்சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

### சாதனங்களை வைத்திருத்தல்

சாதனங்களை வைத்திருத்தலும் அழித்தொழித்தலும்.

53. (1) உரித்துப் பதிவாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதனம் எதுவும் நடப்புப் பதிவொன்றை அது ஆதரிக்கும் வரைக்கும் உரித்துப் பதிவகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.



(2) உரித்து சம்பந்தமாக அல்லது காணித் துண்டிலுள்ள அக்கறை சம்பந்தமாக இடாப்பிலுள்ள பதிவீடொன்று மேலோங்கப்பட்டவிடத்து அல்லது பயனில்லாதொழிந்துள்ளவிடத்து, உரித்துப் பதிவாளர் அத்தகைய பதிவீட்டுக்கெதிராக இடாப்பில் அப்பயன்பட குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) உரித்து சம்பந்தமான அல்லது காணித் துண்டிலுள்ள அக்கறை சம்பந்தமாக இடாப்பிலுள்ள பதிவீடொன்று மேலோங்கப்பட்டதன் அல்லது பயனில்லாதொழிந்ததன் பின்னர் பத்து வருடங்கள் முடிந்ததன்மேல், உரித்துப்பதிவாளர் விதித்துரைக்கப்பட்ட முறையில் பதிவீட்டை ஆதாரப்படுத்திய ஏதேனும் சாதனத்தை அழித்தல் வேண்டுமென்பதுடன் அப்பயன்பட இடாப்பில் பதிவீடொன்றைச் செய்தலும் வேண்டும்.

### உரித்து சென்றடைதல்

இறுதிவிருப்பாவணங்களையும் - அதன் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்ட சாதனங்களையும் பதிவு செய்தல்.

54. (1) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவர் மரணசாதனத்தை விட்டு இறக்கின்றவிடத்து, மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்குதலும் மரணசாதனத்தின் நியதிகளின்படி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க உரித்துப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவிடாப் பங்கொன்றின் சொந்தக்காரராக அல்லது இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படக்கூடிய விதித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த காணித் துண்டின் அளவிலும் குறைந்த அளவினதாகப் பிரிபட்ட பங்கொன்றின் சொந்தக்காரராக ஆளொருவரை ஆக்குகின்ற மரணசாதனமொன்றின் ஏற்பாடு எதுவும் சட்டப்பயனுடையதாதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட இறுதிவிருப்பாவணம் ஒன்றின் ஏற்பாடொன்று தொடர்பில் விண்ணப்பமொன்று கோப்பிடப்பட்ட அல்லது எண்பிக்கப்பட்ட நீதிமன்றமானது உத்தேசக் கோரிக்கையாளர்களிடையே அத்தகைய காணித் துண்டை விற்பனை செய்யுமாறு கட்டளை இடுதல் வேண்டும்.

(4) மரணசாதனவழியுரிமை விடயத்தில் 29 ஆம், 30 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரம் மரண சாதனம் எழுதாது இறந்தல்.

55. (1) பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவர் மரணசாதனம் எழுதாது இறக்கின்றவிடத்து, அக்கறையுள்ள திறத்தவர் எவரும் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் இறப்புபற்றி உரித்து நிர்ணய ஆணையாளருக்கு அறிவிக்கலாம்.

(2) உரித்து நிர்ணய ஆணையாளர் அவ்வாறு அறிவிக்கப் பட்டதன் மேல் அத்தகைய மரணமெய்திய ஆள் சார்பில் பதிவுசெய்யப்பட்ட காணித்துண்டுகளுக்கான கோரிக்கையாளர்களைக் கோரி விதித்துரைக்கப்பட்ட முறையில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(3) மரணசாதனமிலா வழியுரிமைச் சந்தர்ப்பங்களில் கோரிக்கையாளரை அழைக்கும் உரித்து நிர்ணய ஆணையாளரின் மீது 13, 14, 20, 21, 22, 23, 24, 25, 26, 27 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சொத்துவத்தைப் பதிதல்.

56. (1) ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் அல்லது விற்பனைச் சான்றிதழின் பயனைக்கொண்டு இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் காணித் துண்டின் சொந்தக்காரராக அல்லது அக்கறை கொண்டுள்ளவராக எவரேனும் ஆள் வருகின்றவிடத்து, உரித்துப் பதிவாளர், அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய சான்றினால் ஆதாரப்படுத்தப்பட்ட அத்தகைய ஆளின் விண்ணப்பத்தின்மீது அத்தகைய காணியின் அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையின் சொந்தக்காரராக அத்தகைய ஆளைப் பதிவு செய்தல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றக் கட்டளையின் பயனைக்கொண்டு சொந்தக்காரர் ஒருவர் என்ற தன்மையில் எவரேனும் ஆள் பணிபுரிய உரித்துடையவராக வருகின்றவிடத்து, உரித்துப் பதிவாளர், அவரது திருப்திக்கேற்ற ஆதாரப்படுத்தும் ஆவணத்துடன் அதன் சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் அத்தகைய தன்மையில் அத்தகைய ஆளைப் பதிவுசெய்தல் வேண்டும்.



## பொது

ஆட்சியுரிமை.

57. முதலாம் வகுப்பு பூரண சொத்துவ உரித்துடன் அல்லது இரண்டாம் வகுப்பு சொத்துவ உரித்துடன் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட காணித் துண்டுக்கு அல்லது காணித் துண்டுகளிலுள்ள அக்கறைகளுக்கு (68 ஆம் அத்தியாயமான) ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டம் ஏற்புடைத்தாதலாகாது.

சீர்படுத்தலும் நட்டோத்தரவாதமும்.

58. உரித்துப் பதிவாளர் பின்வரும் சந்தர்ப்பங்களில் இச்சட்டத்தின்கீழ்ப் பேணப்படும் இடாப்புகளையும் வேறு பதிவேடுகளையும் சீர்படுத்தலாம் :—

(1) (அ) எவரேனும் உரிமையாளரின் அக்கறைகளை முக்கியமாகப் பாதிக்காத பிழைகள் அல்லது தவிர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டவிடத்து ;

(ஆ) நில அளவையாளர் தலைமையதிபதியினால் சான்றுபடுத்தப்பட்டவாறாக மீள அளப்பனவின் மீது அத்தகைய திருத்தத்தினால் பாதிக்கப் படக்கூடிய அல்லது அக்கறை கொண்டுள்ளவர்கள் என அத்தகைய பதிவாளருக்குச் சாட்டப்பட்ட எல்லோருக்கும் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி அறிவித்தல் கொடுத்து அதன்மீது எழுத்திலான முறைவீடுகளை வேண்டிக் கொண்டதன்மீது இடாப்பில் அடங்கியுள்ள விபரங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளவிடத்து ;

(இ) பிறப்புகள், இறப்புகள் பதிவுச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் பெயர் மாற்றம் பற்றிய எண்பிப்பின்மீது,

உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து கிடைத்த ஒரு கட்டளையின் மீது.

(2) ஐம்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய இடாப்பை சீர்படுத்துமாறு நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மீது.

நீதிமன்றம் சீர்திருத்துமாறு கட்டளையிடும் அதிகாரம்.

59. அறுபதாம் பிரிவிற்கமைவாக, நீதிமன்றமானது ஏதேனும் பதிவு மோசடி மூலமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதெனத் திருப்தியடைகின்றவிடத்து, இடாப்பைச் சீர்திருத்துமாறு கட்டளையிடலாம் :

ஆயின், எவ்வாறாயினும், உடைமையில் உள்ளவரும் பெறுமதியான எதிர்ப்பயனுக்காக அக்காணித் துண்டை அல்லது அதிலுள்ள அக்கறையைக் கொள்வனவு செய்துள்ளவருமான பதிவுசெய்யப்பட்டுள்ள சொந்தக்காரரின் உரித்தைப் பாதிக்கத்தக்கவிதமாக அத்தகைய சொந்தக்காரர் அத்தகைய மோசடிக்கு ஒரு திறத்தவராக இருந்தால் ஒழிய, இடாப்பொன்றைச் சீர்திருத்துமாறு ஒரு நீதிமன்றம் கட்டளையிடுதலாகாது.

இழப்பை அல்லது சேதத்தை அடைகின்ற ஆள் நட்டஈடு அளிக்கப்படுதல் வேண்டும்.

60. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றக் கட்டளை ஒன்றைப் பின்பற்றி இடாப்பைச் சீர்திருத்தியதன் காரணமாக; அல்லது

(ஆ) 59 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளை ஒன்றன் விளைவாக இடாப்பைச் சீர்படுத்தாமை காரணமாக,

நட்டத்தை அல்லது சேதத்தை அடைந்த அல்லது பங்கமாகப் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள் நீதிமன்றத்தின் கட்டளையின்மீது அரசாங்கத்தினால் காப்புறுதி நிதியத்திலிருந்து நட்டவீடளிப்பதற்கு உரித்துடையவராவார்.

(2) பிரிவு 59இன் கீழ் ஏதேனும் மோசடிக்குத் தாமாகக் காரணமாகியுள்ள அல்லது கவனிசமானவளவில் உதவியளித்துள்ள அல்லது அத்தகைய மோசடிக்குக் காரணமாகியுள்ள அல்லது அத்தகைய மோசடிக்கு கணிசமாகப் பங்களிப்புச் செய்துள்ள ஆள் ஒருவரிடமிருந்து தனது உரித்தைப் பெறுகின்ற, எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தின்கீழ் நட்டஈட்டு வகையாக எப்பணத்தொகைகளும் செலுத்தப்படுதல் ஆகாது.

(3) உரித்தை இழந்ததன் காரணமாக அல்லது ஏதேனும் காணியிலுள்ள அக்கறையை இழந்ததன் காரணமாக நட்டஈட்டு வகையாக ஏதேனும் பணத்தொகை அளிக்கப்பட்டவிடத்து அத்தொகையானது —



(அ) இடாப்பு சீர்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தில் சீர்படுத்துவதற்கு நேரே முன்னர் காணித் துண்டின் சந்தைப் பெறுமதியை அல்லது அத்தகைய காணித் துண்டின் அக்கறையை ;

(ஆ) இடாப்பு சீர்படுத்தப்படாத ஏதேனும் விடயத்தின் அத்தகைய அக்கறை தொடர்பிலான பதிவீடு இடாப்பில் செய்யப்பட்ட நேரத்தில் காணியின் சந்தைப் பெறுமதியை அத்தகைய காணிக்குள்ள அக்கறையை,

விஞ்சுதலாகாது.

(4) நட்டஈட்டு வகையாக ஏதேனும் பணத்தொகை அளிக்கப்பட்டவிடத்து உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி சுருக்கமுறை நடவடிக்கை மூலம் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது எவரேனும் ஆளின் மோசடி மூலம் அல்லது அசட்டை மூலம் இழப்பை விளைவித்த அல்லது கணிசமாகப் பங்களிப்புச் செய்த அவ்வாளிடம் இருந்து அவ்வாறு அளிக்கப்பட்ட தொகையை அறவிடலாம்.

மேன்நிலைக்கு அல்லது பற்றாக்குறைக்கு நட்டஈடு எதுவும் செலுத்தப்படமாட்டாது.

61. நில அளவையாளர் தலைமையதிபதியினால் சான்றுபடுத்தப்பட்ட இடப்பரப்பின் அல்லது காணி அளவின் ஏதேனும் மேன்நிலை அல்லது, குறைபாடு காரணமாக நட்டஈட்டுக் கோரிக்கை எதுவும் எழுதலாகாது.

காப்புறுதி நிதி.

62. (1) மத்திய வங்கியின் மேற்பார்வையின்கீழ் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியினால் முகாமை செய்யப்பட வேண்டிய காப்புறுதி நிதியமொன்றிருத்தல் வேண்டும்.

(2) இந்தக் காப்புறுதி நிதியத்துக்குள் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறானவையான இச்சட்டத்தின்கீழ் அறவிடப்படுவதான அத்தகைய கட்டணங்கள் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 58இன்கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் யாவும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பிரிவிடுதல் சட்டம் ஏற்புடையதாகாது.

63. முதலாம் வகுப்பு பூரண சொத்துவ உரித்துடன் அல்லது இரண்டாம் வகுப்பு சொத்துவ உரித்துடன் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் காணிக்குப் பிரிவிடுதல் சட்டம் ஏற்புடையதாகாது.

தவறுகள்.

64. (1) நில அளவையாளர் தலைமையதிபதியை, உரித்து நிர்ணய ஆணையாளரை அல்லது உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியை அல்லது அவர்களின் உதவியாளர்களை அல்லது பிரதிநிதிகளை இச்சட்டத்தின்கீழ் அவர்களது கடமைகளைப் புரிவதில் வேண்டுமென்று தவறாக வழிநடத்துகின்ற அல்லது ஏமாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு வருடத்திற்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, அத்தகைய குற்றப் பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

இடாப்புகள் தொடர்பிலான தவறுகள்.

65. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் பேணப்படும் ஏதேனும் இடாப்பில் அல்லது வேறு ஆவணத்தில் அல்லது அதன் ஏதேனும் பிரித்தெடுத்த பகுதியில் ஏதேனும் அழிப்பை அல்லது மாற்றத்தை அல்லது ஏதேனும் பிரித்தெடுத்த பகுதியை அல்லது வேறு ஆவணத்தை அல்லது ஏதேனும் பதிவை மோசடியாக வழங்குகின்ற அல்லது ஆக்குகின்ற அல்லது மோசடியாக வழங்கச் செய்கின்ற அல்லது ஆக்கச் செய்கின்ற ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பேணப்படும் ஏதேனும் இடாப்பை அல்லது அத்தகைய பதிவகத்தில் கோப்பிடப்பட்டுள்ள ஏதேனும் இடாப்பின் ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் சாதனத்தை ஒரு பதிவகத்திலிருந்து மோசடியாக அகற்றுகின்ற ; அல்லது



(இ) அத்தகைய ஏதேனும் இடாப்பில் அல்லது கோப்பிடப்பட்ட ஏதேனும் சாதனத்தில் ஏதேனும் உருவழிப்பை, அழிப்பை, சேதத்தை அல்லது அதிகாரமளிக்கப்படாத பதிவீட்டை அல்லது மாற்றத்தை மோசடியாகச் செய்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னராக சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது பதினையாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

கட்டணங்கள்.

66. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் அவை எந்தக் கருமங்கள் தொடர்பானவையோ அந்தக் கருமங்களுக்காகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

67. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் கொண்டு நடாத்துவதற்கு அல்லது பயன்கொடுப்பதற்கும் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்துக்கும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதில் அவதானிக்கப்பட வேண்டிய நடைமுறைகளுக்கும் செய்முறைக்கும் ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

(2) மேற்போந்த ஏற்பாட்டின் பொதுமைக்குப் பங்கமின்றி அமைச்சரானவர் பின்வருவனவற்றிற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) இணக்கச் சபைகளை நியமிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்குமான நடவடிக்கைமுறை ;

(ஆ) உரிமைக் கோரிக்கைகளை நுண்ணாய்வு செய்யும் முறை ;

(இ) காணி திரட்டலுக்கும் மீளப் பங்கிடுதலுக்குமான நடவடிக்கை முறைகள் ;

(ஈ) ஆக்கக்குறைந்த சிக்கலைக் கூறுகளுக்கான பரப்பளவு ;

(உ) இச்சட்டத்தின்கீழான பதிவேடுகளைப் பேணுதல் ;

(ஊ) காப்புறுதி நிதியத்தின் நிருவாகமும் முகாமையும் ;

(எ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் படிவங்கள் ;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்துக்கு முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அதன் அங்கீகரிக்கப்படாத தேதியிலிருந்து நீக்கஞ்செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) எந்தத் தேதியில் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கஞ்செய்யப்பட்டதாகக் கருதப்பட்டதோ அந்தத் தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

[illegible] 68. (1) ஏதேனும் அரச நிறுவனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை, அத்தகைய நிறுவனத்தின் அல்லது உள்ளூரதிகாரசபையின் திட்டமிடல், நிருவாகம் அத்துடன் வேறு தொழிற்பாடுகள் என்பனவற்றிற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பேணப்பட்ட பதிவேடுகளைப் பயன்படுத்தலாம் அத்துடன் அவற்றை அடையும் உரிமையையும் கொண்டிருக்கலாம்.

(2) ஏதேனும் அரச நிறுவனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியை இச்சட்டத்தின்கீழ் பேணப்பட்ட பதிவேடுகளின், அதில் பதிவுசெய்யப்பட்ட காணிகள் மீள அதற்கு வருமதியான கொடுப்பனவுகளின் விவரங்களை உள்ளடக்குமாறு வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன் உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி விதித்துரைக்கப்பட்ட முறையில் உரித்துப் பதிவேட்டில் அத்தகைய தகவலைப் பதிவுசெய்வதற்கு அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.



(3) ஏதேனும் அரச நிறுவனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை உரித்துப் பதிவாளர் தலைமையதிபதியை, இச்சட்டத்தின்கீழ் பேணப்படும் பதிவேடுகளில், காணித் துண்டின் இயற்கை ஆதனங்கள் தொடர்பான விவரங்கள் காணித் துண்டின்மீது செய்யப்பட்ட ஏதேனும் அபிவிருத்தி ஏதேனும் வசதியுரிமை என்பனவற்றை உள்ளடக்குமாறு தேவைப்படுத்தலாம்; அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதன்மேல், உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட முறையில் அத்தகைய தகவல் உரித்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வைத்தல் வேண்டும்.

69. (1) அமைச்சரானவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஏதேனும் இடப்பரப்பை காணி திரட்டுதல், மீளப் பங்கிடுதல் நடைமுறையினுள் வரும் ஒரு இடப்பரப்பாக வெளிப்படுத்தலாம். காணி திரட்டுதல்.

(2) மேலே (1) ஆம் உட்பிரிவின் நியதிகளில் ஓர் அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்குமிடத்து, உரித்து நிர்ணய ஆணையாளர் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளில் அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இடப்பரப்புகளில் காணி திரட்டலுக்கும் மீளப்பங்கிடுதலுக்குமான நடவடிக்கை முறைகளைப் புகுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

70. (1) அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் உரித்துப் பதிவேடுகள், எந்த இடப்பரப்புக்கு இணங்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் இடப்பரப்பு, காணித்துண்டின் ஆகக்குறைந்த பயன் வளம் வாய்ந்த கூறுகளின், கோட்பாடுகள், ஏற்புடைய வேண்டிய ஓர் இடப்பரப்பாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். ஆகக்குறைந்த பயன்வளம் வாய்ந்த கூறுகளின் கோட்பாடுகள் ஏற்புடைய இடப்பரப்பை வெளிப்படுத்தும் அறிவித்தல்.

(2) மேலே (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருக்குமிடத்து, உரித்து நிர்ணய ஆணையாளர், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை முறைகளைப் புகுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

கணனி நுண் நிழற்பட வசதிகளைப் பயன்படுத்துதல்.

71. கணனியும் நுண் நிழற்பட வசதிகளும் இச்சட்டத்தின் கீழான எவையேனும் இடாப்புக்களையும் பதிவேடுகளையும் பேணுவதற்குப் பயன்படுத்தப்படலாம்.

செயலுக்கான பாதுகாப்பு.

72. இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது அவரது கடமைகளைப் புரிவதில் அவரினால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும், உரித்து நிர்ணய ஆணையாளரின் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு நில அளவைத் தலைமையதிபதிக்கு அல்லது உரித்துப் பதிவாளர் தலைமையதிபதிக்கெதிராக தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதல் ஆகாது.

வேறு சட்டங்களுடனான முரண்பாடு.

73. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எவை எப்படியிருப்பினும் பயனுறுத்தலுடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்திற்கும் வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்குமிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படுமிடத்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய வேறு சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

74. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

75. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"சாதனம்" என்பது, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஏதேனும் காணித்துண்டுக்குள்ள உரித்தையும் அக்கறையையும் உரித்து மாற்றும் பயன்கொண்ட ஆவணம் ஒன்று எனப் பொருள்படும்;

"காணித் துண்டில் அக்கறை" என்பது, காணித் துண்டின் முழுச் சொத்தாண்மைக்குக் குறைந்த ஏதேனும் அக்கறை என்பதுடன் அத்தகைய காணித் துண்டு மீதான ஏதேனும் வசதியுரிமை அல்லது பாரபந்தத்தையும் உள்ளடக்குகிறது;



"காணி" என்பது, தண்ணீரால் மூடப்பட்ட காணி, ஏதேனும் காணியிலிருந்து எழும் ஏதேனும் நன்மை, மண்ணுடன் இணைக்கப்பட்ட அல்லது அதனுடன் நிரந்தரமாகக் கட்டப்பட்ட எல்லாப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது;

"உரிமையளிக்கப்பட்ட ஏலதாரர்கள்" என்பது, (109 ஆம் அத்தியாயமான) ஏலதாரர்கள் தரகர் கட்டளைச் சட்டத்தின்கீழ் உரிமையளிக்கப்பட்ட ஓர் ஏலதாரர் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது காணிகள் எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"சொந்தக்காரர்" என்பது —

(அ) காணித் துண்டு [illegible]

(ஆ) [illegible]

பொருள்படும்;

"காணித்துண்டு" என்பது நில [illegible] தனிவேறாக எல்லைப்படுத்தப்பட்ட [illegible] உள்ளது எனப் பொருள்படும்;

"உரித்துப் பதிவாளர் தலைமையதிபதி" என்பது [illegible] ஆம் பிரதி அல்லது உதவியாளரையும் உள்ளடக்குகிறது;

"உரித்துப் பதிவாளர்" என்பது இச்சட்டத்தின்கீழ் உரித்துப் பதிவாளராக நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"பதிவு செய்யப்பட்ட காணித் துண்டு" என்பது எந்தக் காணித் துண்டுக்கான உரித்து இந்தச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்தக் காணி என்று பொருள்படும் ;

"வசதியுரிமை" என்பது வேறு ஆளுக்குச் சொந்தமான ஒரு காணித் துண்டு மீது ஓர் ஆளினால் அனுபவிக்கப்படும் ஓர் உரிமை எனப் பொருள்படும் ;

"நில அளவையாளர் தலைமையதிபதி" என்பது, இலங்கை நில அளவையாளர் தலைமையதிபதியூடாக நியமிக்கப்பெற்ற அலுவலர் அல்லது இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, அத்தகைய நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு அவர் சார்பில் செயலாற்று எழுத்தில் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் எனப் பொருள்படும் ;

"நில அளவைகள் கண்காணிப்பாளர்" என்பது நில அளவைத் திணைக்களத்தில் நில அளவைகள் கண்காணிப்பாளர் ஒருவரின் பணிகளைப் புரியும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

"உரித்துப் பதிவேடு" என்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பேணப்படும் உரித்துப் பதிவேடு எனப் பொருள்படும் ;